THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது இது வரையில் ப்ளாக் ஏரியாவுக்குத்தான் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. இன்னும் சிற்சில இடங்களில் ப்ளாக்குக்கு வெளியிலும் நடத்தப்பட்டு வருகிறது.

Police protection to railway goods

* 257 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether policing responsibility of railway goods and properties is undertaken by the State Police ; and

(*b*) if so, the strength, i.e., deputed for this purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR : ரெயில்வே சொத்துக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நம்முடைய ராஜ்ய போலீசுக்குக் கிடையாதா? பாஸஞ்சர் டிராபிக்கைப் பொறுத்த வரையில் நமது போலீசுக்குப் பொறுப்பு இல்லையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரெயில்வே செக்யூரிடி போர்ஸ் இருக்கிறது. அவர்கள் பாதுகாத்துக்கொள்வார்கள். பொதுவாக பாதுகாப்பதற்காக இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த ரெயில்வே போலீஸ் கவனம் செலுத்தி வருகிறது.

Manimuthar Project

258 *Q*.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM) : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to include any ayacuts which will be immediately beneficial in the Manimuthar Project?

THE HON. SRI P. KAKKAN : An ayacut of 17,378 acres has been included already under the Manimuthar Project. The question of including 2,792 acres of water rate lands under several tanks and certain inam and private tanks lying in the midst of ayacut and in between the chain of tanks is under consideration by the Public Works Department and Revenue Officers. Beyond this, it may not be possible to include any more area under the Project.

SRI M. K. SOMASUNDARAM : அந்த நிலங்கள் எந்த எந்த தாலூகாவில் இருக்கின்றன என்று தெரிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : பொதுவாக, இந்த மணிமுத்தாறு பாசன உதவி அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, நான்குனேரி ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் தாலூக்காக்களுக்குத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். பொதுவாக, இந்த 2,792 ஏக்கராக்கள் இந்தத் தாலூக்காக்களில் இருக்கலாம். அல்லது ஒரே தாலூகாவிலும் இருக்கலாம். எந்த எந்த தாலூகாவில் எத்தனை ஏக்கர்கள் என்பதற்குத் தனிக் கேள்வி போடலாம்.